செ.வெ.எண்: 66/2021 நாள்: 30.08.2021

# மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழுக் கூட்டம் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், தலைவர்/ திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.சுப்பராயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழுக் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், திரு.பி.ஆர்.நடராஜன் (கோயமுத்தூர்), திரு.அ.கணேசமூர்த்தி (ஈரோடு), திரு.கு.சண்முக சுந்தரம் (பொள்ளாச்சி), மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தலைவர்/திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.சுப்பராயன் அவர்கள் தலைமையில், இன்று ( 30.08.2021) நடைபெற்றது.

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் தேவைகளை அறிந்து பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். ஏறத்தாழ ஒன்றை ஆண்டு காலமாக கொரோனா தொற்று வந்ததிலிருந்து வளர்ச்சித்திட்டப்பணிகள் நடைபெறாமல் இருந்தது. படிப்படியாக கொரோனா தொற்று குறைந்து வருகிறது. பாக்கி இருக்கும் வளர்ச்சித் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க இந்த கூட்டத்தின் வாயிலாக அலுவலர்களை கேட்டுக்கொண்டுள்ளோம். அலுவலர்கள் செய்து முடிப்பார்கள்.

மத்திய அரசின் திட்டங்கள் குறித்து மக்களுக்கு எடுத்துச்செல்லும் வகையில், திட்டத்தின் மதிப்பு எவ்வளவு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகைகயில் பெயர் பலகை வைக்க வேண்டும். இந்த கூட்டத்திலே மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் மூலம் ஒரு நியாய விலைக்கடை கட்டுவதற்கு 1சதுரடிக்கு எவ்வளவு மதிப்பு நிர்ணயிக்கிறார்கள் என்பதையும் அதன் வித்தியாசம் எவ்வளவு என்பதையும் அவற்றை முறை படுத்த வேண்டும் எனவும், அதே போல் இயற்கை சீற்றத்தினால் வேளாண் பயிர்கள் சேதமடையும் போது உதாரணத்திற்கு வாழை பயிரிடும் போது ஒரு கிராமத்தில் ஒரு ஊரிலே ஐந்து ஆறு விவசாயிகள் வாழை

*பயிரிட்டால் மழை, காற்று போன்ற இயற்கை சீற்றத்தினால் முழுமையாக பயிர்கள் சேதமடையும். அப்போது அந்த பிர்க்கா முழுவதும் சேதமடைந்தால் தான் பயிர்க்காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.*

*அவற்றை மாற்றி அந்த காப்பீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் படி முறைப்படுத்த வேண்டும் என்பது குறித்தும், அதே போல், ஒன்றிய அரசினால் கொள்முதல் செய்யப்படும் தேங்காய் பருப்பாக கொள்முதல் செய்கிறார்கள். அவற்றை மட்டை உரித்த முழு தேங்காயாக கொள்முதல் செய்ய வேண்டும். அப்போது தான் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமையும் என மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மத்திய அரசு திட்டமானாலும், மாநில அரசு திட்டமானாலும், அலுவலர்கள் முழு கவனம் செலுத்தி விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன், மாநகராட்சி ஆணையாளர் திரு.கிராந்தி குமார் பாடி இ.ஆ.ப., தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த்மோகன் இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சிக்குழுதலைவர் திருமதி.சத்தியபாமா மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.***